மாலை மலர்
இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR
திருச்சி 11-1-2018 (வியாழக்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ மலர் 41 இதழ் 28

### குழந்தை திருமணத்தை தடுக்க

# கிராம அளவில் குழந்தைகள் பாதுகாப்பு குழு

## மாநில கருத்தரங்கில் தீர்மானம்

*திருச்சி, ஜன.11–*

திருச்சியில் குழந்தைகள் திருமணம் தடுப்பு தொடர்பான மாநில அளவிலான தொண்டு நிறுவனங்கள் பங்கேற்ற கருத்தரங்கம் நடைபெற்றது. திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வனஜா வரவேற்றார்.

குழந்தை திருமணத்தால் ஏற்படும் பிரசவ சிக்கல்கள் குறித்து டாக்டர் சுகன்யா, பேராசிரியை குளோரி டெபோரா, ராஜா குலோத்துங்கன் ஆகியோரும் குழந்தை திருமணம் தடுப்பு சட்டம் பற்றி குமரகுரு, டாக்டர் ராதா தாமோதரன் ஆகியோரும் பேசினர்.

தமிழ்நாடு மாநில குழந்தை தடுப்பு திட்ட ஒருங்கிணைப்பாளர் சதிஷ் பாபு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் இந்தியாவில் 13 மாநிலங்களில் 10 வயது முதல் 15 வயது குழந்தை திருமணங்கள் அதிக அளவில் நடைபெறுவதாகவும், தமிழகத்தில் குறிப்பாக நாமக்கல், கொல்லிமலை பகுதியில் 53.4 சதவீதம் குழந்தை திருமணம் நடைபெறுவதாகவும், குழந்தை திருமணங்கள் நடைபெறுவதால் பிரசவத்தின் போது தாய், சேய் இறப்பு ஏற்படுவது அவர்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுதல் ஆகியவை ஏற்படுவதாகவும், இவற்றை தடுக்க சிறப்பு சட்ட முன்முடிவு இயற்ற வேண்டும்.

கிராம அளவில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஒருங்கிணைத்து கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு அமைத்து கண்காணிக்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் மாநில செய்தி தொடர்பாளர் கோவிந்தன், மற்றும் தொண்டு நிறுவன நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கூட்டத்தில் டாக்டர் சதிஷ்பாபு பேசிய போது எடுத்த படம்.